காணப்படும் உயிர்வகை விலங்குகளிலும், உயிர்வகை
தாவரங்களிலும் தோற்றங்களை வைத்து முன்னோடிக
ளாகும். பல்வேறுபட்ட இயற்கைச் சூழல்கள், இச் சூழ
ல்களில் தொடர்ந்து ஏற்பட்ட மாறுதல்கள் (மாற்றம்)
இம்மாறுதல்களுக்கேற்ப ஜீவன்கள் தம்மை இசைவா
க்கம்செய்துக் கொள்ளும் முயற்சியில் ஒரு ஜீவன் பெற்
ற வெற்றியை போன்று இன்னோர் ஜீவன் பெற முடிய
வில்லை. இந்த நிலைமையே பல புதிய ஜீவன்கள் படிப்படி
யாக தோன்றுவதற்கு வழிவகுத்தது.

உயிர் வகை விலங்குகளின் தோற்றமானது பல
சிக்கல் நிலைகளூடாக மிக நீண்ட கால இடைவெளி
நடந்தேறியுள்ளது. முதல் தோன்றிய ஜீவராசிகள்
[ALBUMINOUS] திரவநிலையும், கருவையும் கொண்ட
கலமானது சுயமாக தனக்கேற்ற சூழலில் வாழ்ந்து
கொண்டது. உணவை உள்ளெடுத்தல், சுவாசம், கழிவகற்
றல், இனப்பெருக்கம் போன்ற செயற்பாடுகளை தானே
செய்து கொண்டது [உ-ம் அமீபா, பரமேசியம், கிளமிடோமோ-
-னாஸ்] இந்த இனப்பெருக்கம் பிளவு முறையினால் நடைபெ
ற்றுள்ளது. இவ்வாறு பிளவுமுறை மூலம் பெறப்பட்ட புதி
-ய கலமானது தாய்க்கலத்தில் இருந்து விலகிப்போய் தனி
யாகவே வாழத்தொடங்கியது. பிந்திய காலங்களில் ஏற்ப
ட்ட சூழல்மாற்றங்களின் போது இவை தனிக்கலங்களா
க வாழ்ந்து அச்சூழல் வெற்றி கொள்ள முடியவில்லை.
அதாவது ஜீவன்கள் சூழலுக்கேற்ப தம்மை இசைவாக்
கம் செய்து கொள்வது அவைகளின் உடலில் சிற்சில்
ஏற்படும் உணர்வுகளின் விளைவாகும். எனவே ஏற்பட்ட
சூழல் மாற்றத்தை இவை வெற்றி கொள்ள வேண்டுமெனின்

அமைப்பிலும், உடற்றொழிலியலிலும் முன்னேற்றம் காணவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.

இக்காலம் முக்கியமான செய்முறை தொடங்குகிறது. கலங்கள் கூட்டாக ஒன்று சேர்ந்து ஒர் கூட்டமைப்பாக வாழத்தொடங்கின. இச் செய்முறை மெல்லமாக நடந்தேறியது. புதிதாக தோன்றிய சேய்க்கலமானது தாய்க்கலத்தை விட்டு பிரிந்து செல்லாமல் சேர்ந்தே இருந்து கொண்டது. இவ்வாறு பல கல நிலைமை அடைந்தவுடன் முன்பு ஒரு கலம் செய்த வேலைகளை இப்போது தொழிற் பங்கீட்டுடன் கலக்கூட்டம் செய்யத் தொடங்கியது. எனவே புதிய திசுவில் ஒழுங்கு வெளிப்பட கொள்ள முடிந்தது.

தொழிற்பங்கீட்டின்போது புதல் திசுவில் அசைவதற்கு [உணர்வு], இடப்பெயர்ச்சி செய்வதற்கு, உணவை உள்ளெடுப்பதற்கு கழிவகற்றுதல், வாயுப்பரிமாற்றம் போன்ற செயல்களை செய்வதற்கென்று பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இவை சிறப்பான முன்னேற்றமாக அமைந்தது. இம் முன்னேற்றமானது கலக்கூட்டங்களிடையே திரிபுமாற்றத்தை ஏற்படுத்தியது. அதாவது உணவை உள்ளெடுக்கும் கலக் கூட்டம் உணவைத்தான் உள்ளெடுக்கவேண்டும், வாயுப் பரிமாற்றத்தை செய்யும் கலக்கூட்டம் அதே தொழிலைத்தான் என்ற நிலையான மாற்றத்தை பெற்றுக்கொண்டன. அதாவது கல நிலையில் இருந்து இழையம் தோன்றும் அளவிற்கு கூர்ப்படைந்தன.
[ஒரே வகையான பல கலங்கள் சேர்ந்து ஒரு தொழிலை செய்யுமாயின் அது இழையம் எனப்படும்]
தொழிற்பங்கீட்டுடன் காணப்பட்ட இத்தகைய அமைப்பை கொண்ட அங்கி காலப்போக்கில் வளர்ச்சியை அடைந்த-

-டுக் கொண்டது. இவ்வளர்ச்சி அதிகரிப்பானது. மேலும் உடற்றொழிலியலில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டிய நிலைமைக்கு அதனைத் தள்ளியது. எனவே வளர்ச்சியடைந்த உடலிற்கு ஓரளவு உறுதியை கொடுப்பதற்கு வன்கூடு தேவைப்பட்டது [உம் மீனின் முள்] உள்ளெடுக்கப்பட்ட உணவை மற்றப்பகுதிகளுக்கு கடத்துவதற்கும், வாயுப்பரிமாற்றம் போன்ற செய்முறைகள் சிறப்பாக நடந்தேறுவதற்கும் கடத்தும் தொகுதி தேவைப்பட்டது. அந்த நீர் வாழ் புறச்சூழலை மிகவும் சிறப்பான முறையில் அறிந்துகொள்வதற்கும், எதிரியிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கும் சிறப்பான உணரும் அமைப்புக்கள் தேவைப்பட்டது. உணர்வுகளை காவிச்செல்ல நரம்புத் தொகுதியும், இனப்பெருக்கத்திற்காக இனப்பெருக்கத் தொகுதியும் கொண்டுவரப்பட்டன.

இவ்வாறு அங்கியின் தேவைகளுக்கேற்ப மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இன்னும் பல உடல்தொகுதி மாற்றங்கள் நடந்தேறின. இறுதியாக அவை வாழ்ந்த சூழல்களுக்கேற்ப அமைப்பு வடிவங்களையும் பெற்றுக்கொண்டன.

உயிரினங்கள் 50 கோடி ஆண்டுகளின் முன்பே தோன்றிவிட்டன. நீர்நிலைகள் உயிரினங்களின் ஆரம்பகால வாழ்க்கைக்கு ஏற்ற இடமாக காணப்பட்டது. மீனினங்கள் 40 கோடி ஆண்டுகளின் முன்பும், ஆதித்தொப்போட்டுக்கள் [முள்ளந்தண்டற்ற ஊர்வனம்] 25 கோடி ஆண்டுகளின் முன்பும், பாலூட்டி இனங்கள் 20 கோடி ஆண்டுகளின் முன்பும், இறுதியாக மனிதன் 40 இலட்சம் ஆண்டுகளின் முன்பும் தோன்றினான்.

-இயங்கியன் □

பேசுவதில்லை. இங்கோ இராணுவத்திடம் இவ்வாறு அநுபவங்களைப் பெற்ற செல்லாச்சிப் பாட்டிக்கு இந்த இந்திய இராணுவத்தின் கொடுந்தனங்கள் அதிர்ச்சியையோ மலைப்பையோ கலக்கத்தையோ கொடுக்கவில்லை. மகாத்மா காந்தியின் வாரிசுகள் இவர்கள் என்ற நம்பிக்கையை பொய்ப்பித்தது. அவ்வளவு தான்!

சந்து பொந்துக்குள் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட காட்டுத்தனமான கூத்துக்கள்..... பாட்டியின் உடம்பு வெட்டி முறிந்து தரையில் விழுந்து கிடந்தது. அதே இராணுவத்தினன் தமிழ் கதைக்கும் ஒல்லியானவனை கூப்பிட்டு கட்டளை போடும் தொனியில் ஏதோ சொன்னான். அவனும் தலையை மெல்ல குனிந்து பவ்வியமாக ஆட்டி விட்டு பாட்டியிடம் வந்தான்.

« ஏய் கிழவி உன்ர பேரன் எங்கேட்ட வருவது எங்கே தெரியும்! அவன் எங்கிட்டு இருக்கான் என்று உனக்கு தெரியும்!
உன்னை இப்பிட்ட கேட்டா நீ ஒன்றுமே சொல்லமாட்டாய் அதனால் உன்னை காட்டுக்கு கொண்டு போறம் »

« இவ்வளவு போதுமா..... இந்த கிழவியை கொண்டு என்ன செய்யப் போறியள் அதையும் நான் பார்ப்பம்.. » கைகளை இடுப்பில் கொடுத்தபடி நெஞ்சை நிமிர்த்தினாள் பாட்டி.

பாட்டி ஷூப்பினால் தாக்கப் பட்டாள். அதோ சரியாக இலக்கில் இந்த வாரிசை வதை செய்து மகிழ்ந்த பாட்டியின் இரு பற்கள் துப்பாக்கியால் தெறித்தன.

செல்லாச்சி பாட்டி இல்லாமல் இந்த உலகத்தில் நல்லதோ கெட்டதோ எந்த காரியமும் நடக்காது. சந்தையில் இருந்து சாமி கோவில் ஆலயம் வரை, செல்லாச்சி பாட்டி அந்தால் தனியானவள். பாட்டியும் அப்படித்தான்; ஊருக்குள் எந்த விடயம் நடந்தாலும் சரி, தான் விட்டு விடாமல் முன்னின்று காரியத்தில் இறங்குவாள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக எங்கு அரசியல் ஊர்வலமோ சத்தியாக்கிரகமோ என்றாலும் பாட்டி அங்கு நிற்பாள். சத்தியாக்கிரகம் என்றால் சொல்லத் தேவையில்லை. அன்னையர் முன்னணி நடத்திய போராட்டங்கள் ஒன்றிலுமே பாட்டி தப்ப வில்லை. ஊர்க்கோயில் கூட்டமோ தன் தோட்ட வேலைகளை தொடர்ந்து

ஒருத்தியையோ இரண்டு பேரையோ அழைத்துக் கொண்டு போராட்டங்களில் சங்கமிக்க போய் விடுவாள் செல்லம்மாப் பாட்டி.

பாட்டி துணிந்தவர்தான்!

87ம் ஆண்டு ஐப்பசி இறுதியில் இந்திய இராணுவம் நடத்திய ஒப்பரேசன் நடவடிக்கையின் போது.... பாட்டி கண்ணகி அம்மன் கோயிலின் அகதிகளோடு இருந்தாள்.

வடக்கால பொன்னுத்துரையின் ஒரேமகள் அசங்காவுக்கு இதுதான் பெருமாதம் பிரசவ வேதனையில் ஒரு கத்தல்... அழுகை... முனகல்

«ஏடி பிள்ளை மெதுவா மெதுவா.. வெளியில ஒரே சண்டை நடக்குது: வெடியள் எங்கேயும் இந்தியன் ஆமிக்கும்! இதுக்குள்ள என்னெண்டு வெளிக்கிடுறது..» தகப்பன் பொன்னுத்துரை சீலையால அசங்காவின் முகத்துக்கு விசிறியபடி

அதுவும் நடுச்சாமம் ஒரு வண்டியோ காரோ எதுவுமே இல்ல கோயில் அகதிமுகாமில் இருந்து. செல்லம்மா பாட்டியும் நாலு தெரிந்த வைத்தி-யம் எல்லாம் செய்து பார்த்துவிட்டது அவ பேரா முன்னேற்றமாக இல்ல மூர்க்கமாக கத்தினார்.

«இந்தளவுக்கும் பொன்னுத்துரையர் இனி இவள இங்கு வைச்சிருக்கக் கூடாது. பிடியுங்கோ ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவம். ஏதோ கடவுள் விட்ட வழி!» அசங்காவின் நெற்றி வியர்வையை துடைத்தபடி செல்லம்மாப் பாட்டி.

«உனக்கென்ன விசரோ.... வெளிய போகேலாது; ஒரே பீரங்கி துவக்கு சத்தமாயிருக்கு» பொன்னுத்துரை-யர் தாடியை உதறிக் கொண்டார்.

«சாகிறது எப்பவும் சாகிறதுதான் அதுக்காக கண்முன்னால ஒரு உயிரை துடிதுடிக்க சாக விடுறதே! பிடியுங்கோ சயிக்கிளில வைச்சுக் கொண்டு கட்டிக் கொண்டு போவம் ஆஸ்பத்தி-ரிக்கு. நடக்கிறது நடக்கட்டும்» துள்ளி எழுந்தார் மாணிக்கியர் பக்கட்-சாரம்.

செல்லம்மாப்பாட்டி தலைமையில் பஞ்-சாட்சர வாத்தியார் பொன்னுத்துரையர் மூன்று பேருமாய் அசங்காவை சேர்த்துக் கொண்டு கட்டி சயிக்கிளில் ஆஸ்-பத்திரிக்கு கொண்டு போனார்கள்.

உண்மையிலேயே செல்லம்மாப்பாட்டி உறுதியானவர். 65 வயதாகியும் இன்னமும் நடுக்கட்டையாக இருந்தார்-

சரியாக நாளை 30 வயதிலிருந்து
விடுதலை கோலம். இருந்தும் ஒரு மகனை
அன்பு கொட்டி வளர்த்தான். தோட்டம்
தோப்பு எல்லாம் அமைத்தான். மகனுக்கு
பொருத்தமான மாப்பிள்ளையையும்
தேடி வைத்தான்.

இருந்தாற் போலவந்த மார-
-டைப்பு மகனுக்கு இயமனை
3 வயதுக் குழந்தை அவனை. தியாகு!
தனது முழு உழைப்பையும் கொட்டி
பேரனை ஆளாக்கினான். உயர்தர
வகுப்பு வரை தியாகுவும் படித்தான்.
நாட்டின் நெருக்கடி விட்டெறிந்த
கிளர்ச்சி அலையின் இளைய அடக்குமுறை-
-கள், தமிழ் இளைஞர் மத்தியில் வழிப்
பெற்ற போராட்ட இயக்கங்கள்...
அடுக்கினால்... இளைஞனை தியாகு
வையும் தாக்கத்தை உண்டுபண்ணியது.

தியாகு இளைய அணியுடன் புத்தளம் (?)
ஒரு இரவு வீட்டை விட்டு வந்து
படித்தான். பாட்டி … …
பாடல் இதயம் (?) «சொந்தத்தில் அமைதி
டாமோ... படமோ...»
என்று அழுது தொண்டை கிழியும்
தியாகு பாட்டி … காதில் விழுமா?
« அந்த இளைஞர்கள் தங்களை
இழந்து இன்று போராட்டத்துக்கு
இருக்கிறார்கள். அந்த உயர்ந்த
அந்த போதை இளைய வேதனை (?)
கிடைக்கப்பட்டது. இந்த தியாகங்கள்..
இந்த இழப்புக்கள்... என்ன செய்ய?

வெறும் தனி நாட்டுக்காக வா..?
சுதந்திரத்துக்காக... 'சுபீட்சமான
வாழ்வுக்காக...! எங்கள் சமூகத்தின்
விடுதலைக்காக உலகம் வியந்து நின்று
பார்க்க செய்கிறது (?). … இன்
னமும் போர் சூழலில்... தமிழ்
சமூகத்தில், இளைஞர்களுக்கு தீர்வு எங்கே
இருக்கிறது?

ஆம்... தியாகு யதார்த்தமாக மாறச்
சிந்தித்து ஆய்வு செய்தான். சில காலம்
அந்த இயக்கத்திலே தியாகு எவ்வளவோ
பொறுப்புடன் … செய்திட்டான். சில
இளைஞர்கள் அவன் தோழர் …
வயது வந்தவர்கள் தம்பி என்றனர்
மரியாதையோடு.

அவனுக்கு இந்த இயக்கத்தில் கிடைத்த
மரியாதைக்கு மேலாக … -
-டைத்து … அவன்
தானே ஒரு விடுதலை இயக்கத்தை
நிறுவிக் கொண்டான்

«அராஜகம் நாட்டைத் தொட்டால்பட
வேண்டும்... இளைஞர்களின் எமது
போராட்டத்தை … அறிந்து பாதை

பசுத்தி விடும். »பின்னர் சிறையின் மடியில் நடந்த உடைத்தில் தானிருந்து பேசினான் தியாகு.

இயக்கப் பிரச்சாரப் பணியில் கெட்டோமாக ஈ. பேட்டு ஊன்றி பெதியல் 82 செய்த போது, இருவரும் கொக்கோமாய் கிராமத்தில் வைத்து சிங்கள இராணுவத்தால் சிறைய பிரசாரங்களுடன் தியாகு கைது செய்யப்பட்டான்.

தியாகு சிறைக்குச் சென்று இரு வருடத்துக்குள் இயக்கத்தோர் சிறைய மாற்றங்கள்... விடுதலைப் போராட்டத்தை அரசு கைகம் கருத்துக் கூறும் அளவுக்கு தனது பற்களையும் கொண்டு வெளிக்கு இயக்கத்துக்குள் ரூம் சிறைய மாற்றங்கள். இயக்கங்களுக்கிடையில் ஒற்றுமையின்மை

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை இயக்கமே முகஸ் ஆதரித்தது என்று அறிந்து

« ஓ... எங்கள் போராட்டம் விலை பேசப்பட்டது. மக்கள்... ஆக்கிரமிப்பாளர்களின் பிடி இறுகப் போகிறது. விட்டார்கள்... இந்த ஒப்பந்தம்... இரு நாடுகளினதும் நலன் கருதியே ஒழிய எமது மக்களின் உரிமைகளை அடிப்படையாக வைத்து பூர்த்தி செய்யாது... பழுத்து பழுத்து முட்டாளாகி விட்டார்கள்» தியாகு கலங்கினான்.

« அமைதிப் படை என்ற பெயரில் இன்று இந்தியா வின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை இது... இன்று எமது போராட்டம் மேலும் இந்தியாவுக்கு எதிராகத்தான் நடத்தப்பட வேண்டும். அதுவும், ஐக்கியப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் ஜனநாயக சக்திகளால் முன்னெடுக்கப்பட வேண்டும்» என்று

சிறைய விதையாக்க சிறையில் இருந்த ஏனைய அதிகாரியாரிடமும் ஆய்வு செய்தான்.

அரசியல் கைதிகள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பெயரில் வெளியே வந்தனர். தியாகு தலைமறைவாகினான். இயக்கம் அவனை தேடித் தேடி தேடியது.

செங்காச்சிப் பாட்டி முகாமுக்கு கொண்டு வரப்பட்டு ஒரு சிறிய அறையினுள் தள்ளி விடப்பட்டான்.

இன்றைய பகல் முழுவதும் பாட்டியின் காவில் இன்றுதான் படவில்லை... பசிக்களை... மயக்கம் போட்டது. «ஐயோ அம்மா... ஐயோ அம்மா... ஐயோ... ஐயோ»

என்ற அலறல் குரல் பாட்டியை திகைக்க வைத்து விட்டது. அந்தக் குரல் ஒரு சிறுவனுடையது தான் என்பதை புரிந்து கொள்ள பாட்டிக்கு அவ்வளவு நேரம் எடுக்கவில்லை.

இந்திரா வதை முகாம் தான் இருப்பதையிட்டு பாட்டி பெரிதாக ஒன்றும் கவலைப்படவில்லை. இது வரை வாழ்ந்த நாட்களுமே பாட்டிக்கு ஒரு திறந்த சிறைச்சாலைதான்!

பாட்டி இந்த இந்திரா வதை முகாமுக்கு கொண்டுவரப்பட்ட போது ஒரு உறுதியெடுத்துக் கொண்டார். மனித நேயம் மறந்த மனித மிருகங்கள் மத்தியில்... இராணுவமானாலும், தான் எதுவுமே கதைப்பதில்லை... அவர்கள் எது வேண்டுமானாலும் செய்யட்டும்... ஆயினும் தனது மௌனம் பல உண்மைகளை அவர்களுக்கு எதிர் காலத்தில் போதிக்கட்டும்! பாட்டிக்கு இப்போ இருப்பதெல்லாம் தன் பேரன் தியாகுவைப் பற்றிய கவலைதான்.

அவன் உண்மையாக எமது இனத்தையும் மக்களையும் நேசிக்கிறான்! அதனால்தான் போராட்டத்தையே வாழ்க்கையாக்கிக் கொண்டான். இனது இலட்சியம் வெற்றிபெறும் வரை, தான் இருக்கா விட்டாலும் பரவாயில்லை. அதற்குள் தன் பேரனுக்கு ஒன்றும் நடந்து விடக் கூடாது.

எங்கள் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கும் கொடுமைகளுக்கும் இழப்புகளுக்கும் பெறுமதி வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் ஈடாக நாம் தொடர்கின்ற இந்த யுத்தம் விடுதலையை பெற்றுக் கொடுக்க வேண்டும் ஆகிய இந்திரா வதை முகாமில் இருக்கும் பாட்டியின் இன்றைய பிரார்த்தனையாக இருக்கிறது.

சாங்கிருத்தியான் ◻

---

வாசகர்களே!
மனிதம்,
தனது வளர்ச்சிக்கும்
உறுதிக்குமான
ஆக்கங்களையும்,
விமர்சனங்களையும்,
உங்களிடமிருந்து
வரவேற்கிறோம்! ஆ-ர் குழு.

**Manitham**
Zentrum 5 (Z 5)
Unterstützungsverein
Postfach 8542
3001 Bern
SWITZERLAND

மலையகம்:

# தேயிலைச் செடிகளில் தேய்ந்த முகங்கள்



இலங்கையில் பிரித்தானியரின் வருகையுடன் மலையக மக்களின் வருகையும் ஆரம்பித்துவிட்டது. பிரித்தானிய ஆட்சியினர் இலங்கைக்கு வந்த பொழுது, அங்கே யாழ்ப்பாண அரசும் தென்கே கோட்டை இராச்சியமும் போர்த்துக்கீசரால் தோற்கடிக்கப்பட்ட நிலையில், கண்டி ராட்சியம் சுதந்திர அரசாக விளங்கியது. பிரித்தானியர் கண்டி இராட்சியத்தைக் கைப்பற்றி, அங்குள்ள நிலங்களை கோப்பி பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தினர். இக்காலகட்டத்தில் கோப்பிப் பயிர்ச் செய்கைக்கு சிங்களத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த முடியாத. இக்கட்டான நிலை பிரிட்டிஷ் அரசிற்கு ஏற்பட்டது. தொழிலாளர்களாக தென்னிந்தியாவிலிருந்து மலையக மக்கள் தோட்டப்பயிர்ச் செய்கைக்காக கொண்டுவரப்பட்டனர்.

மலையக மக்களுக்கு இலங்கையில் 1½ நூற்றாண்டுக்கு மேற்பட்ட தனித்துவமான வரலாறும், அரசியல் பொருளாதார. சமூக. [illegible] பின்னணியும் உண்டு.

(NA) உம் அங்கம் வகிக்கின்றது. இவ் இயக்கத்தின் பின் உயர்மட்டக் குழுவில் 68 வயதுடைய 'Gaston Armand' என்ற பழைய பாசிஸ்ட்டும் அங்கம் வகிக்கின்றான். [இவன் ஸ்பானிய சர்வாதிகார ஆட்சிக்கு சார்பாக இருந்து-ம் யுத்தம் போராடியவன்] இவ் இயக்கத்தினது மகாநாடு சுவிஸ் இல் உள்ள Freiburg இல் வழமையாக நடை பெற்று வருகின்றது. மேற்கூறிய புதிய நாசிகளின் கருத்துக்களை உத்தியோகபூர்வமாக NA கட்சி பிரதிபலிப்பு செய்கின்றது. NA பிரசுர வெளியீடுகளுக்கு அங்கத்தவரின் தபால் பெட்டி இலக்க முகவரி இணைப்பு குழுவிற்கு பயன்படுத்தப்படுகிறது.

இவ்வருட மே மாதம் நடைபெற்ற வாரத்தில் Kanton Zug இல் உள்ள தமிழ் கடை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் ஓர் தமிழர் படுகாயமுற்று வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சுவிற்சலாந்திலுள்ள புதிய நாசிகள் இளைஞர்களும் அதி தீவிர வலது சாரிகளும் மேலும் மேற்கு ஜேர்மனியிலுள்ள புதிய நாசிகளுமாக நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களைக் கொண்ட விருந்துபசார விழாவினை PF ஒழுங்கு செய்திருந்தது. இவ்விழா Kanton Zug இல் உள்ள Red Cross மண்டபத்தில் நடைபெற்றது. இவ் விழாவில் கலந்து கொண்ட 20 மொட்டையடித்த இராணுவ உடை



